செ.வெ: 654 11/10/07

# பத்திரிக்கை செய்தி

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் இன்று (11.10.2007) காலை தமிழகத்தில் மிகப்பெரிய மின்சாரத் திட்டங்கள் (4000 மெகாவாட் ) நிறுவுவதில் உள்ள முன்னேற்றம் குறித்து ஒரு ஆய்வுக்கூட்டம் கூட்டினார். இக்கூட்டத்தில் மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும் கலந்து கொண்டார். மேலும், தலைமைச் செயலாளர் திரு. எல்.கே. திரிபாதி, எரிசக்தித்துறை முதன்மைச் செயலாளர், திரு. இரா.சத்பதி, நிதித் துறை செயலாளர், திரு. கே.ஞானதேசிகன், நெடுஞ்சாலைத் துறை செயலாளர், திரு.கே.அலாவுதீன், தமிழ் நாடு மின்சார வாரியத் தலைவர், திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, மெரிடைம் போர்டு தலைமை நிர்வாக அதிகாரி திரு. பி.ஆர். சம்பத் மற்றும் தமிழ் நாடு மின்சார வாரிய உயர் அதிகாரிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் தமிழகத்தில் சிறு துறைமுகங்கள் (கேப்டிவ் துறைமுகங்கள்) அமைப்பது குறித்தும், வர்த்தக ரீதியான அனல் மின்சார திட்டங்கள் அமைப்பது மற்றும் மத்திய அரசு தமிழகத்தில் நிறுவிட உள்ள மிகப் பெரிய மின்சார திட்டங்கள் (அல்ட்ரா மெகா பவர் ப்ராஜக்ட்) குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் செய்யூரில் நிலத்தின் விலை ஏக்கருக்கு ரூ.35 இலட்சங்கள் முதல் ரூ.40 இலட்சங்கள் வரை சொல்லப்படுவதால், அங்கு மிகப்பெரிய மின்சார திட்டம் நிறுவும் திட்டம் கைவிடப்படலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.